## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, திரண்ட நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியின் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர சம்மேளனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக ˙கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்;

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கால்பந்து விளையாட்டு நிலையத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 15,741,004 பெறுமதி மேலும் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா | 2020 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட விளையாட்டு நிலையத்திற்குரிய பெறுமதி நடைமுறை யல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 15,741,004 மற்றும் சொத்துக்கள் மற்றும் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 524,175 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | | |
| (ஆ) | சம்மேளனத்தின் முன்னால் முகாமையாளரால் போட்டி நடுவர்களின் தவறான பெயர்கள் உள்ளடக்கப்பட்டு பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டதுடன் இப் பண மோசடி தொடர்பாக குற்றத்தடுப்புப் பரிசோதனை திணைக்களத்தினால் மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மோசடி நீதிமன்றத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.<br>மோசடி செய்யப்பட்ட மொத்த தொகையாக சம்மேளனத்தினால் ரூபா 46,860,672 என 2020 ஆகஸ்ட் மாதத்தின் போது கண்டுபிடிக்கப்பட்டதுடன் இம் மோசடி உட்பட மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங் காணப்பட்ட நிதிய மாற்றங்களாக ரூபா 16,053,116 மாத்திரம் பெறவேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மோசடி செய்யப்பட்ட பணததை அறவிடுவதற்கு சம்மேளனத்தினால் 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் அதன் பிரகாரம் இப்பணத்தை அறவிடுவதற்குள்ள இயலுமை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை. | உரிய வழக்கு விடயங்கள் அடிப்படையில் வழங்கப்படும் நீதிமன்ற தீர்மானத்துடன் இது தொடர்பாக இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மோசடி செய்யப்பட்ட பண அளவு தொடர்பான சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க வேண்டியதுடன் அப்பணத்தை அறவிடு வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உள்ளுராட்சிமன்ற நிறுவனங் களுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேரில் சம்மேளனத்தின் மூலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் உள்ளுராட்சி மன்றங்களுக்குரிய விளையாட்டரங்குகளில் அபிவிருத்தி நடவடிக்கை களுக்காக சர்வதேச உதைப்பந்தாட்டச் | 2020 ஆம் ஆண்டில் சீராக்க நவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை ஆதனங்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சம்மேளத்தினால் நேரடியாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி குத்தகை சொத்துக்களின் கீழ் தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மீது பிற்போடப்பட்ட வரவுப் பொறுப்பொன்றாக ரூபா 137,994,358 ஐந்தொகை திகதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் தவறாக காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,306,765 தொகையான யாழ்ப்பாண விளையாட்டுத் தொகுதி 2011 ஆம் ஆண்டு முதல் காலக்கழிவு நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நவடிக்கை எடுக்கப்படும். | காலக்கழிவு நிதிஏற்பாடு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| | **விடயம்** | **தொகை ரூபா** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய கணக்குகள் | 13,234,765 | மீதி உறுதிப்படுத்தல் | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களுக்குரிய போதியளவும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுத்திவைக்கப்பட்ட நிதியம் | 4,582,669 | விரிவான அட்டவணை | | |

**1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டு உட்பட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்மேளத்தினால் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு கருத்தரங்குகள் நடாத்துவதற்காக போட்டி அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் மொத்தம் ரூபா 1,465,997 ஆக இருந்தது. வழங்கப்பட வேண்டிய முற்பணத்தை தீர்மானிக்காமல் இருந்ததுடன் குறித்த செயற்பாடுகள் முடிவடைந்து தாமதமாக முற்பணங்களை தீர்வுசெய்வது தொடர்பாக சம்மேளனத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சந்தர்ப்பத்திற்கேற்ப ஆகக்கூடிய முற்பண தொகை வேறு படுவதுடன் அதனை தீர்வு செய்வதற்காக திட்டவட்டமான காலப்பகுதியொன்றை வழங்குதல் 2020 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும். | குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் முடிவுற்றவுடன் தாமதமின்றி முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 205,083,615 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 5,775,154 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 199,308,461 ஆன அதிகரிப்பபொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 283,924,848 ஆல் இவ்வதிகரிப்பிற்கு அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டின்இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சம்மேளனத்தின் வருமானம் ரூபா 481 மில்லியன் மற்றும் செலவினம் ரூபா 276 மில்லியன் ஆக இருந்ததுடன் சம்மேளனத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட சொத்துக்களின் அளவு ரூபா 593 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சம்மேளனத்தில் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |